மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செங்கோட்டை
முன்னிலை திரு.எஸ்.இளையராஜா, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், செங்கோட்டை
2025 ம் ஆண்டு ஜீன் திங்கள் 21 ம் நாள் சனிக் கிழமை
ஐ.ஏ.எண்.04/2025

இன்

அசல் வழக்கு எண்.57/2022

....

1. அருணாசலம்
2. ஆறுமுகசாமி ...மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. பார்வதி
2. இளையகுமார்
3. பூர்ணசந்திரிகா
4. லூக் ஜெயக்குமார் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது என் முன்பு விசாரணைக்கு வந்தபோது .மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஏ.மாரிக்கனி அவர்கள் முன்னிலையாகியும், 1 வது, 2 வது பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வெங்கடேஷ் அவர்கள் முன்னிலையாகியும், 3 வது பிரதிவாதியை அழைத்தும் ஆஜராகாமலும், எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமலும் இருந்து வந்ததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டும், 4 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.Y.அசாத் முன்னிலையாகியும், வரப்பெற்ற இம்மனுவில் இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்களையும் ஆராய்ந்து பார்த்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்....

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 7, விதி 14(3) மற்றும் 151 சி.பி.சி–யின் கீழ் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய அனுமதியளிக்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:</u>

2 ம் மனுதாரர், 1 ம் வாதியின் மகன் ஆவார். அசல் வழக்கில் 2 ம் வாதி ஆவார். வழக்குரை தபசில் சொத்துக்களை மனுதாரர்கள் அமைதியான முறையில்

அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ மோசடி ஆவணத்தை பயன்படுத்தி இடைஞ்சல் செய்யக்கூடாது என நிரந்தர தடையாணை வேண்டியும், பிரதிவாதிகளால் மோசடியாக 2ம் தபசில் சொத்தை பொறுத்து பிறப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் வாதிகளாகிய தங்களை கட்டுப்படுத்தக்கூடியதில்லை என மேற்படி ஆவணம் Null and Void என விளம்புகை பரிகாரம் கேட்டு மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் பாதுகாப்பிற்காக வீட்டில் வைத்திருந்ததாகவும், தங்களால் உரிய காலத்திற்குள் கண்டுபிடிக்க இயலவில்லை எனவும், ஆகையால் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் வழக்குரை தாக்கல் செய்யும்போது கிடைக்காமல் தேடி பார்த்து தற்போதுதான் தங்களுக்கு கிடைத்தால் வழக்குரை தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், மேற்படி தவறுகள் வேண்டுமென்றே ஏற்பட்டது அல்ல எனவும், எனவே மேற்படி மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித கஷ்ட, நஷ்டமும் உண்ணடாகப்போவதில்லை. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>4ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்திருக்கும் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கது இல்லை. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் இந்த வழக்கிற்கும், எந்த வகையிலும் நேரடியாக தொடர்பு இல்லாத ஆவணங்கள் ஆகும். மனுதாரர் இந்த மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய சங்கதிகள் எதையும் மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் எந்த ஒரு இடத்திலும் குறிப்பிட்டு கூறவில்லை. ஆனால் அசல் வழக்கின் 1ம் வாதி அருணாசலம் தேன்பொத்தை கிராமம், திருமலாபுரம் ஊர், இல்லத்தார் தெரு, சுப்பையா பிள்ளை குமாரர் குளத்துாராம் அவர்களுக்கு கடந்த 08.04.1996 ஆம் தேதியில் ரூ.10,000/த்திற்கு பண்பொழி சார்பதிவாளர் அலுவலக அவண எண்398/1996 ஆக பதிவு செய்யப்பட்டு எழுதிக்கொடுத்துள்ள அடமான பத்திரத்தில் "நானும் என் வகையறாக்களும்

சேர்த்து பண்பொழி சப்ரி ஆபிசில் பதிவு செய்து கொண்ட பாக உடன்படிக்கை தஸ்தாவேஜ்படி எனக்கு சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்ட சொத்துக்களில் இதன் தபசில் கண்ட சொத்தை நான் நாளைய தேதியில் அடமானம் செய்து கொண்டுத்து வாங்கிய ரூ.10,000/-ம் என்று அசல் வழக்கின் 1ம் வாதி அருணாசலம் அவர் பாக சொத்தை அடமானம் வைத்துள்ளதாக மேற்கண்ட அடமான பத்திரம் ஆவண எண்.398/96 ல் குறிப்பிட்டுள்ளார். எனவே மேற்படி ஆவணங்களை இந்த வழக்கில் குறியீடு செய்ய இயலாது. ஆகையினால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

4. <u>**பிரச்சனை:-**</u>

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை ஆகும்.

<u>**பிரச்சனைக்குரிய தீர்வு**</u>

5. **இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

6. மனுதார்கள்/ வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஏற்றுக்கொண்டு வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய அனுமதி கோரியுள்ளார். மேற்படி ஆவணங்கள் தொடர்பாக ஏற்கனவே வழக்குரை Plleadings ல் விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் காலபிற்பாடாக தயாரிக்கப்பட்டவை எனவும், எனவே மனுதாரர்களின் மேற்படி மனுவை தள்ளுபடி செய்யக்கோரி குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மேற்படி ஆவணங்களை பாதுகாப்பிற்காக வீட்டில் வைத்திருந்ததாகவும், அவர்களால் உரிய காலத்திற்குள் கண்டுபிடிக்க இயலவில்லை எனவும், எனவே மனுவில் கண்டுள்ள ஆவணங்களை வழக்குரை தாக்கல் செய்யும்போது கிடைக்காமல் தற்போதுதான் தேடிபார்த்து கிடைத்ததால் மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு குறியீடுசெய்ய உத்தரவிடக் கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்படி பரிசீலனைகளின் அடிப்படையில் காணும்போது மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி ஆவணங்களை மனுதாரர்கள்/வாதிகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு உத்தரவிடுவதால் அதனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு அசௌகரியம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேற்படி அசௌகரியத்திற்கு செலவு தொகை விதிப்பதன் மூலம் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவை அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே மேற்படி பரிசீலனைகளிலிருந்து இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் மனுதாரர்/3ம் பிரதிவாதிக்கு ஒரு வாய்ப்பு அளித்து, இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித கஷ்ட, நஷ்டமும், ஈடு செய்ய இயலாத இழப்பும் ஏற்படபோவதில்லை.

**முடிவாக,**

இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு செய்யப்பட்டு என்னால் படித்துப் பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2025ம் ஆண்டு ஜீன் திங்கள் 04–ம் நாள் புதன் கிழமை அவையறிய பகரப்பட்டது.

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2025.06.21 15:28:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், செங்கோட்டை

மா.உ.நீ.ந. செங்கோட்டை
ஐ.ஏ. எண்.04/2025
(இன்)
ஓ.எஸ்.எண்.57/2022
உத்தரவு
நாள் 21.06.2025